அ.வ.எண்: 149/2019 நாள்:13.06.2023

வா.சா.1. ராஜேஸ்வரி

**1 மற்றும் 2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

1) என்ன பரிகாரம் கோரி இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் என்னுடைய சாகுபடி உரிமையை கேட்டுள்ளேன். பிரதிவாதிகள் சாகுபடி செய்ய விடமாட்டேன் என்கிறார்களா என்றால் நான் தான் சாகுபடி செய்து வருகிறேன் தற்போது பிரதிவாதி ஆக்கிரமித்து கொண்டு விடமாட்டேன் என்கிறார். தாவா சொத்தின் விஸ்தீரணம் எவ்வளவு என்றால் 33 செண்ட் ஆகும். மேற்படி நிலத்தின் என்ன விதமான உரிமை எனக்கு உள்ளது என்றால் நிலத்தின் உரிமையாளர் என்னிடம் ஒப்படைத்துள்ளார்.

2) என்னிடம் ஒப்படைத்ததற்கு ஆவணம் ஏதேனும் நிலத்தின் உரிமையாளர் கொடுத்துள்ளாரா என்றால் இல்லை. நிலத்தின் உரிமையாளர் எப்போது என்னிடம் ஒப்படைத்தார் என்பதற்கும் என்ன நிபந்தனை என்பதற்கும் ஆவணங்கள் உள்ளதா என்றால் 1985 ஆம் ஆண்டு ஜீன் மாதத்தில் நில உரிமையாளர் எனக்கு 60 செண்ட்ம் நிலத்தை சாகுபடி செய்து வந்த செல்வத்திற்கு 75 செண்ட்ம் கிரையம் செய்து கொடுத்துவிட்டு தாவா சொத்தை என்னிடம் ஒப்படைத்தார். தாவா புல எண். 229/3 என்பது மொத்த விஸ்தீரணம் 1 ஏக்கர் 68 செண்ட் மற்றும் ஏற்கனவே செல்வத்தின் தகப்பனார் அப்பாவுபிள்ளை என்பர் குத்தகை சாகுபடி செய்து வந்தார் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படுவது அப்பாவுபிள்ளைக்கும் ராமசாமிபிள்ளைக்கும் ஏற்படுத்தப்பட்ட குத்தகை ஒப்பந்த பத்திரம் என்றால் சரிதான்( மேற்படி பதிவு செய்யப்பட்ட குத்தகை ஒப்பந்த பத்திரம் பி.வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது) .

3) எனக்கு கிரைய சாசனம் 1985 ல் ஏற்படும் போதே அப்பாவுபிள்ளை மகன் செல்வம் 1 ஏக்கர் 68 செண்ட்டை குத்தகை பாத்தியத்தை விடுதலை செய்து பத்திரம் பதிவு செய்து கொடுத்தார் மேற்படி பத்திரத்தை பார்த்த பிறகு தான் நாங்கள் கிரையம் செய்தோம் என்றால் சரிதான். எங்களுக்கு கிரையம் செய்த போதே செல்வத்திற்கும் கிரையம் செய்து கொடுத்தார் என்றால் ஆமாம். விடுதலை பத்திரத்தை காண்பித்தார்களா என்றால் காண்பித்தார்கள் நான் படித்து பார்க்கவில்லை. நான் கிரையம் வாங்கிய 26.06.1985 வரையில் 1 ஏக்கர் 68 செண்ட் செல்வத்தின் குத்தகை

அனுபவத்தில் இருந்தது என்றால் சரிதான். குத்தகை பாத்தியத்தை விட்டுக் கொடுத்ததற்காக செல்வத்திற்கு ரூபாய் 6000/- செட்டியார் கொடுத்தாரா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

4) தாவா 33 செண்ட் 26.06.1985 வரையிலும் செல்வத்தின் அனுபவத்தில் இருந்து வந்தது அடுத்த நாள் என்வசம் உள்ளது என்றால் சரிதான். தாவா 33 செண்ட் எந்த அடிப்படையில் சாகுபடி செய்தேன் என்றால் தாவா நிலத்தை சாகுபடி செய்து வருமானத்தை வாத்தலை அம்மன் கோவிலுக்கு கொடுக்க வேண்டும் என்று நிலசுவான்தார் செட்டியார் என்வசம் கொடுத்தார். தாவா சொத்து எனது தகப்பனார் ரெத்தினவேல் கட்சிரார் அனுபவத்திலோ தாயார் ஆயிபொன்னம்மாள் அனுபவத்திலோ இருந்ததில்லை என்றால் சரிதான்.

5) எனது பிராது பத்தி 6ல் எனது தாயார் அனுபவத்திலிருந்து எனது தாயார் தான் என்னிடத்தில் ஒப்படைத்ததாக சொல்லியுள்ளேன் என்றால் நான் அவ்வாறு சொல்லவில்லை. நான் கிரையம் வாங்கிய போது ராமசாமி செட்டியார் பெயரிலும் என் பெயரிலும் செல்வம் பெயரிலும் கூட்டுப்பட்டா ஏற்படுத்தப்பட்டது என்னிடம் காட்டப்படுவது தான் கணினி கூட்டுப்பட்டா அது பி.வா.சா.ஆ-2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. கூட்டுப்பட்டாவின் எண் 384 என்றால் சரிதான். 2017 ல் அதன் பிறகு என் பெயரில் தனிபட்டா ஏற்படுத்தப்பட்டது அது தற்போது என்னிடம் காட்டப்படுவது தான் என்றால் சரிதான். அந்த கணினி தனிப்பட்டா பி.வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. என் பெயரில் ஏற்படுத்தப்பட்ட தனிபட்டா எண். 998 என்றால் ஆமாம்.

தொடர் குறுக்கு விசாரணைக்காக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது.

/ஒ.ம்./

பெ. சந்திரசேகர், பி.ஏ., பி.எல்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருவையாறு.